மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெஞ்சுக்கு நீதியும், தோளுக்கு வாளும் நிறைந்த சுடர் மாமணியாம் எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் புதிய பயிற்சிப் பள்ளி ...கே உருவாவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 154 திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

154—
இராசிபுரம் நகரில் அரசுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு.

*4219 திருமதி க, பழனியம்மாள் :
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராசிபுரம் நகரில் அரசுப் பணியாளர்களுக்கு அரசுக் குடியிருப்பு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. டி, எம், செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை,

திருமதி க, பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரமானது மிகவும் பின்தங்கிய. வசதி ஏதும் இல்லாமல் ஒரு சிறிய நகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது, அங்கே அரசுப் பணியாளர்கள் வாடகைக்கு வீடு கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் அங்கு ஒரு குடியிருப்பு கட்டித் தர, வருகிற ஆண்டிலேயே அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம், செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணைப்படி. அரசு அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தர வேண்டுமென்று சொன்னால், அது மாவட்டத் தலைமையிடமாகவோ அல்லது வருவாய்க் கோட்டத் தலைமையிடமாகவோ இருக்கவேண்டும், அந்த அடிப்படையிலே, மாவட்ட ஆட்சியாளருடைய பரிந்துரை இருக்குமாயின். அங்கு அரசுக்குப் போதிய நிலம் இருக்குமாயின், குடியிருப்புகளுக்குத் தேவையான அரசு அலுவலர்களிடமிருந்து டிமாண்ட் கிடைக்கப்படுமாயின் அரசு ஆவன செய்யும் என்று அறிவிக்கின்றேன்.

1992 மார்ச் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 155, டாக்டர் அ. ஸ்ரீதரன். திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்,

155—

கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தைகளுக்கு பணியமர்த்துவதில் முன்னுரிமை,

*1037 டாக்டர் அ. ஸ்ரீதரன் ;
திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கலப்புத் திருமண தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு பணியமர்த்துவதில் ஒரு சிறிய சதவீதம் ஒதுக்கி முன்னுரிமை வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், மருத்துவ பட்டமேற்படிப்பு பொறியியல் ஆகியவற்றிலும் அவர்களுக்கு தனியாக இடங்கள் ஒதுக்கீடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : அரசு ஒதுக்கீடு அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிடப் பாரம்பரியத்தைக் காப்பாற்றி சமத்துவமும். சமுதாய மறுமலர்ச்சியும் சீர் தூக்கி நல்லாட்சி செய்கின்ற நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் கலப்புத் திருமண தம்பதிகளுக்கும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை யாவது வேலைவாய்ப்பிலும், பட்ட மேற்படிப்பிலும் நிரந்தரமாக ஒவ்வொரு தேர்விலும் அமைத்துத் தர வேண்டுமென்று. ஒரு குறிப்பிட்ட பர்செண்டேஜை அமைத்துத் தர வேண்டுமென்று கட்டாயமாக ஒரு ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு தாயின் ஜாதியையோ அல்லது தந்தையின் ஜாதியையோ சார்ந்தவர்களாகக் கருதப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால்